# Public Service Announcement

# இது நீங்கள் அறிந்திருக்க வேண்டியது: வாகன் நகரத்தின் மழைநீர், குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்கள்

**வாகன், ஒன்ராறியோ (செப். 15, 2025)** – வாகன் நகரம் பாதுகாப்பான நம்பகமான குடிநீர் மற்றும் மழைநீர் மேலாண்மை சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது. இதைச் சாதிக்க, தொடர்ந்து முதலீடுகள் செய்வது மிகவும் அவசியம். இதன்மூலம் நகரின் மழைநீர், குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகள் தற்போதும் எதிர்காலத்திலும் சிறப்பாகச் செயல்படுவதை உறுதிசெய்ய முடியும். இந்தச் சேவைகள் அனைத்தும் குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணம் மற்றும் ஆண்டு மழைநீர் கட்டணம் மூலமாக நிதியளிக்கப்படுகின்றன.

**குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணம் என்றால் என்ன?**
நகரம் குடிநீர் மற்றும் கழிவுநீர் சேவைகள், பராமரிப்பு மற்றும் திட்டங்களை வழங்குவதற்காகக் கட்டணம் வசூலிக்கிறது. இந்தக் கட்டணங்கள் நகரத்தின் சார்பில் Alectra மூலம் வசூலிக்கப்படுகின்றன மற்றும் உங்கள் நீர் கட்டணத்தில் (hydro bill) தோன்றும். நீங்கள் பயன்படுத்தும் குடிநீரின் அளவு அடிப்படையில் கட்டணங்கள் இருக்கும்.

பொதுவாகக் கழிவுநீர் கட்டணம் குடிநீர் கட்டணத்தைவிட அதிகமாக இருக்கும், ஏனெனில் இதில் பயன்படுத்திய நீரை சேகரித்து நகர்த்தும் செலவும், அதைச் சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்கள் சுகாதார அளவுகோல்களுக்கு ஏற்ப சுத்திகரிப்புச் செய்து பாதுகாப்பாக வெளியிடுவதற்கான அல்லது மறுபயன்பாடு செய்யத்தக்க நிலையில் மாற்றுவதற்கான சிக்கலான செயல்முறைகளின் செலவும் அடங்கும்.

**வருடாந்திர மழைநீர் கட்டணம் என்றால் என்ன?**
வருடாந்திர மழைநீர் கட்டணம், மழைநீர் அமைப்புகளின் பராமரிப்பு மற்றும் சேவைகளுக்கு நிதியளிக்கும், இதனால் அவை சிறப்பாகச் செயல்பட்டுச் சமூகத்திற்குத் தொடர்ச்சியான சேவையை வழங்க முடியும். இது புதிய கட்டணம் அல்ல – ஜூன் 2017 முதல் பயனீட்டுக் கட்டணங்களில் இருந்து வருகிறது. இதற்கு முன்பு, மழைநீர் சேவைகள் சொத்துக் வரிகள் மற்றும் கழிவுநீர் கட்டணம் மூலம் நிதியளிக்கப்பட்டது. மழைநீர் கட்டணம் ஒரு ஆண்டிற்கு ஒருமுறை Alectra மூலம் வசூலிக்கப்படுகிறது, மேலும் முழு ஆண்டிற்கும் பொருந்தும். இது மே மற்றும் ஜூன் மாதங்களில் உங்கள் நீர் கட்டணத்தில் தோன்றும்.

# Public Service Announcement

**இந்தக் கட்டணங்கள் நாமெல்லாம் தினசரியாக நம்பியிருக்கும் முக்கியச் சேவைகளுக்காக நிதியளிக்கப்படுகின்றன, அவை:**

- வீடுகள் மற்றும் வணிகங்களுக்குப் பாதுகாப்பான, சுத்தமான குடிநீரை வழங்குதல்.
- உள்கட்டமைப்பை நிர்வகித்தல் – உங்கள் வீட்டிற்குள் தண்ணீரை கொண்டு வரும் குழாய்களையும், கழிவுநீரை வெளியேற்றும் குழாய்களையும் கையாளுதல்.
- ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4,000 குடிநீர் மாதிரிகள் எடுத்து, நீர் தரம் விதிமுறைகளுக்கு ஏற்ப உள்ளதா என உறுதி செய்தல்.
- கசிவுகளைக் கண்டறிதல் மற்றும் கழிவுநீர் குழாய்களில் நீர் புகும்/உள்நுழையும் பிரச்சனைகளைக் குறைக்கும் திட்டங்களை உருவாக்குதல்.
- கழிவுநீரை சேகரித்துச் சுத்திகரிப்பு செய்தல் – இதில் குளியல், கழிப்பறை மற்றும் துவைக்கும் செயல்கள் மூலம் கழிவுக்குச் செல்லும் நீர் அனைத்தையும் உள்ளடக்கிறது.
- நகரின் சாக்கடையில் கசடு பிரிந்து நிறுத்தும் குழியமைவுகளை (catch basin) சுத்தப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.
- நகரம் 150க்கும் மேற்பட்ட மழைநீர் மேலாண்மை குளங்களைப் பரிசோதித்து, அவை சிறப்பாகச் செயல்படச் செய்யச் சில குளங்களைச் சுத்தப்படுத்தல்.
- நகரம் 150 கி.மீ.க்கும் மேற்பட்ட இயற்கை நதிகள் மற்றும் குடிநீர் ஓடைகளில் மண்ணரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் அழிவைத் தடுக்கும் நடவடிக்கைகள்.
- மழைநீர் கட்டமைப்புகளின் முன்கூட்டிய மேம்பாடு மற்றும் தடுப்புப் பராமரிப்பு.
- தேவையான போது வாடிக்கையாளர் ஆதரவு வழங்கல்.
- நகரின் மழைநீர் குழாய்களின் வழக்கமான கேமரா ஆய்வுகள்.

கவனிக்க வேண்டியது: உங்கள் கட்டணம் சாதாரணத்தைவிட அதிகமாக இருந்தால், உங்கள் வீட்டில் குழாய்களில் கசிவு இருக்கலாம். உங்கள் சமயலறைக் கழிவுத்தொட்டி, கழிப்பறை, குளியல் தொட்டியை சோதிக்கவும் மற்றும் குடிநீர் மீட்டரை கண்காணிக்கவும். கசிவுகளைச் சரிபார்ப்பது மற்றும் தடுப்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு நகரத்தின் நீர் கசிவு தடுப்பு வலைப்பக்கத்தைப் பார்வையிடவும்.

நகரின் மழைநீர், நீர் மற்றும் கழிவுநீர் சேவைகள் பற்றி மேலும் அறிய, vaughan.ca/**water**-ஐ பார்வையிடவும்.

# Public Service Announcement

புதுப்பிப்புகள் மற்றும் நிகழ்நேரச் செய்திகளுக்காக Vaughan News-ஐ சந்தா செய்யவும், மேலும் அதிகாரப்பூர்வ நிறுவனச் சேனல்களை X, Facebook, Instagram மற்றும் LinkedIn-இல் பின்தொடரவும்.

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca